முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 622**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.06.2021, சனிக்கிழமை

1. கருணைக்கடலே அரங்கா போற்றி
கலியுகத்தின்காப்பே அரசா போற்றி
பெருமைமிக்க தர்மலோகம் உருவாக்க
பிரணவசக்தியாய் வந்தஅரங்கனே போற்றிபோற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும்இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரைஆசி
மாற்றம்செய்யவேண்டி இந்தகலியுகத்தில் வந்த
மாதவசியே உந்தன்தர்மம் உலகைவெல்லும்
3. வெல்லுமப்பா உன்கொள்கைகள் அனைத்தும்
விரைந்துஉலகை ஞானயுகமாக மாற்றம்செய்யும்
இல்லாமை போக்கி இந்தகலியுகத்தில்
எல்லாவளமும்தந்து இயற்கைபாதுகாப்பும் உண்டாகும்
4. ஆகவே அரங்கன் தர்மவழியை
அகிலம் அவசியம் ஏற்றுவரவேண்டும்
மகான் அரங்கன் கொள்கைகளை
மண்ணுலகில் வேதமாகஏற்று உலகோர் தொடரவேண்டும்
5. வேண்டிவேண்டி அரங்கன்வழிக்கு வந்தால்தான்
வினையாக சூழ்ந்துள்ள பேரிடர்கள் அனைத்தும்
உண்டான உயிர்பலி துன்பங்கள் அனைத்தும்
உலகை விட்டு உடன்அகன்றோடி மாற்றங்காணும்
6. காணவே மாற்றம் தரவந்த தவசி
கந்தவேலன் என் மகாசூட்சுமமான யோகி
சிந்தை வைத்து அரங்கன் சொல்செயல்கள்
ஜெகத்தினில் வேதமாக பரவிநிற்க
7. நிற்கவே உலகம் பாதுகாப்புபெறும்
நிலவுலகை இயற்கை பலமோடு
அற்புதமான ஞானஆட்சிக்காலங்கள் உருவாகி
அகிலமே ஞானயுகமாற்றம் பெறும்
8. மாற்றத்தையும் மக்களுக்குண்டான மகத்துவத்தை
மண்ணுலகில் மாதவமாக அருளிவருவதாலே
ஆற்றல்பட அரங்கனை ஏற்றால்போதும்
அனைவருக்கும் அழியாமையென்பது உறுதியாகும்

9. ஆகவே சுப்பன்யான் அரங்கனுக்குள் இருந்து
அற்புதத்தை உலகமெங்கும் நடத்திவர
யுகமக்களே ஒன்றிணைந்து உடன் ஓங்காரக்குடில்நோக்கி வாரீர்வாரீர்
உயர்வாழ்வு பெற்று சிறப்பீர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேளலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.